பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 08 ● புதன்கிழமை (24-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 232

# ஆனையிறவு படையினரின் வானொலி தொடர்பு துண்டிப்பு

## உள்ளே இருக்கும் சிப்பாய்கள் திரிசங்கு நிலையில் திணறல்

கொழும்பு, ஜூலை 24

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து ஏனைய இராணுவத் தளங்கள் மற்றும் கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகம் ஆகியவற்றுக்கான வானொலித் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

இதனால் முகாமிற்குள் சிக்கிப் போயிருக்கும் இராணுவத்தினர் மேலிடத்தின் வழிகாட்டல் இல்லாமல் — அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் — திரிசங்கு நிலையில் இருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் முதல் வானொலித் தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் —

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சண்டையில் வானொலித் தொடர்பை ஆனையிறவு முகாம் படையினர் இழந்திருப்பது இதுவே முதற் தடவை என்றும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

ஆனையிறவு முகாமைச் சுற்றிவளைத்திருக்கும் விடுதலைப் புலிகள், முகாம் மீது தொடர்ந்து நடத்திவரும் தாக்குதலினால் முகாமினுள் இருந்த தொலைத் தொடர்புக் கோபுரம் சேதமடைந்திருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

இதற்கிடையில்—

ஆனையிறவு இராணுவ முகாமை மீட்பதற்காக வெற்றிலைக்கேணி — கட்டைக் காட்டுப் பகுதியில் தரையிறங்கிய ஸ்ரீலங்கா இராணுவத்தின் இரண்டு அணிகளும் ஆனையிறவை நோக்கி முன்னேற முடியாமல் இருக்கின்றன. விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பினால் அவற்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## குப்பிளானில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 24

குப்பிளான் பகுதியில் நேற்றுப் பகல் பொம்மர் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம் பெற்றது.

இரு குண்டுகள் அப்பகுதியில் வீசப்பட்டன. சேத விவரம் தெரியவரவில்லை.

[ஒ-3]

## கட்டைக்காட்டுப் பகுதியில் கிளம்பும் புகை மண்டலம்

### குண்டுவீச்சில் ஆலயம் சேதம்

தாளையடி, ஜூலை 24

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதியில் இருந்து கடும் புகை மண்டலம் கிளம்பி எழும்புவதைக் காணக்கூடியதாக இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்களின் கடற்றொழில் உபகரணங்கள், மீன்பிடி வாடிகள் மற்றும் பொருள்களைப் படையினர் எரிப்பதாலேயே இந்தப் புகை மண்டலம் கிளம்புகிறது என நம்பப்படுகிறது.

இதேவேளை—

புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயம் குண்டுவீச்சுத் தாக்குதலால் பலத்த சேதம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-144(

### மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

மன்னார் — மடு வீதியில் நேற்றுக் காலையில் ஸ்ரீலங்கா படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் சம்பவங்கள் இடம் பெற்றதாகத் தெரிய வருகிறது.

(ஒ-3)

## விடுதலைபுலிகள் இயக்கத்தின் சிறப்புப் படை அணி உதயம்!

### ஆனையிறவில் இப்போது போரிடுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 24

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், மரபு வழி இராணுவத்துக்கு உரிய சிறப்புப் படை அணி [Special Regiment] ஒன்றை உருவாக்கியுள்ளது.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணி— என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

பிரஸ்தாப படை அணியை உருவாக்கியிருப்பது குறித்து தமது உத்தியோக பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தி உள்ளனர்.

பயிற்சி-தந்திரம் - துணிவு- வெற்றி- என்ற தலைவர் பிரபாகரனின் இலட்சிய மொழிகளைத் தாரக மந்திரமாகக் கொண்டு சிறப்புப் படை அணி இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில இளைஞர்களுடன் ஒரே ஒரு ஆயுதத்துடன் தலைமறைவுப் போராட்ட சக்தியாக விளங்கிய விடுதலைப் புலிகள் விடுதலை இயக்கம், இன்று போர்த் திறனிலும், வீர உணர்விலும் நவீன ஆயுதங்களைக் கையாளும் ஆற்றலிலும் கைதேர்ந்த ஒரு மரபு வழி இராணுவமாக பரிணாமம் காண்பதில் ஏற்பட்ட வளர்ச்சி மாற்றங்கள் அந்த அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளன.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## படையினரின் 29 சடலங்கள் கோண்டாவிலில் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வெற்றிலைக்கேணிப் பகுதியில் கொல்லப்பட்ட சிப்பாய்களில், 29 பேரின் சடலங்கள் நேற்று ஸ்ரீலங்கா அரசிடம் ஒப்படைக்கப்படுவதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் கையளிக்கப்பட்டன.

கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்டச் செயலகத்தில் வைத்து சடலங்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இராஜன் சடலங்களைக் கையளித்தார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு சார்பில் திரு. பிரெ..., அதற்கான பத்திரத்தில் கையெழுத்திட்டு சடலங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புல்லாவெளியில் மோதல்

தாளையடி, ஜூலை 24

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதிகளுக்கு அருகே புல்லாவெளியில் ஸ்ரீலங்காப் படையினருக்கும் புலிகளுக்குமிடையே நேற்றுக் காலையும் கடும் மோதல் இடம்பெற்றது.

ஸ்ரீலங்காப் படைகள் புல்லாவெளி காட்டுப் பகுதிக்குள் கடும் வானத் தாக்குதல்களையும் நடத்தின.

இதற்கிடையில் —

இப்பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் இதுவரை ஏழு அதிகாரிகள் உட்பட 101 படையினர் உயிரிழந்ததாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-144)

## பருத்தித்துறைக் கடலில் கடற்படை பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

விடுதலைப் புலிகளிடம் இருந்து பொறுப்பேற்ற - படையினரின் 29 சடலங்களையும் - செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் நேற்று பிற்பகல் ஸ்ரீலங்கா கடற்படையிடம் ஒப்படைத்தனர்.

பருத்தித்துறைக் கடற் பகுதியில் வைத்து இந்தச் சடலங்கள் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நேற்று மாலை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளிடம் இருந்து 29 சடலங்களைப் பொறுப்பேற்றது குறித்தும்—

அவற்றை ஸ்ரீலங்கா கடற்படையினரிடம் ஒப்படைத்தது குறித்தும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு விடுத்த இந்தச் செய்திக் குறிப்பு — நேற்று மாலை — ஒரே நேரத்தில் யாழ்ப்பாணத்தி... கொழும்பிலும் ... களுக்கு வெளியிடப்பட்டது.

[உ-3]

## நேற்று மக்கள் பார்வைக்கு

வெற்றிலைக்கேணி — கட்டைக்காடு பகுதியில் கடந்த ஞாயிறன்று புலிகள் நடத்திய அதிரடித்தாக்குதலில் கொல்லப்பட்ட சிப்பாய்களின் சடலங்களில் 26 சடலங்கள் நேற்று முத்திரைச் சந்தைப் பகுதியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

26 சடலங்களும் தனித் தனிப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன. சில சடலங்கள் சிதைந்த நிலையில் காணப்பட்டன.

பெண்கள், குழந்தைகள், மாணவர்கள் உட்பட ஆயிரக் கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் நின்று சடலங்களைப் பார்வையிட்டுச் சென்றனர். (ஒ-5-15)

## வவுனியா, மன்னாரில் ஊரடங்கு நீக்கம்!

### ஆனால் வாகனங்கள் வரத் தடை!!

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் அமுலில் இருந்து வந்த ஊரடங்குச் சட்டம் உடனடியாக நீக்கப்பட்டிருப்பதாக கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் அறிவித்திருக்கிறது.

எனினும் —

மறு அறிவித்தல் வரை வவுனியாவுக்கு வடக்கே வாகனப் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது.

இதனால் தெற்கிலிருந்து உணவு மற்றும் பொருள்களை ஏற்றிக்கொண்டு வாகனங்கள் வருவது தொடர்ந்தும் தடைப்பட்டிருக்கும் என்று கருதப்படுகிறது.

[உ-எ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு அம்மன் வீதி தலங்காவல பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் இரண்டரைப் பரப்பு காணி, வீடு, கிணறு சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வே. பாலகிருஷ்ணன் சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.
[17597]

### தேவை

நல்ல நிலையில் உள்ள B. M. C. லொறி யந்திரம் 26 அல்லது 28 ஸ்ரீ தேவை. தொடர்பு: ந. சிற்றம்பலம் 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [17590]

### வியாழ மாற்றம்

[ஆகஸ்ட்] வியாழ மாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. ஸ்ரீ ரமண பகவான், ஸ்ரீ சாயி பாபா, அவதார புருஷர்களின் ஒரே வித ஜெனன ஜாதகநிலை அடங்கியது. விலை ரூபா 6-50. நூலாசிரியர் [தத்துவஞானம், ஜோதிட விஞ்ஞானம்] Prof: சத்திய தாஸன், ஞானம்ஸ், சித்தன் கேணி [17589]

### ஜோதிடம்

குருசாபம், பெரியோர் சாபம் வருபவர் மனம்நொந்து சென்றால் வீட்டில் தரித்திரம் உண்டாகும். இது முற்பிறவியில் செய்தால் சாதகமூலமும் இப் பிறவியில் செய்தால் அருடம் மூலமும் அறிந்து தோஷ நிவாரணம் கூறப்படும். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி (அரசடிச் சந்தி), நல்லூர். [17558]

### தவறிவிட்டது

அருளம்பலம் குலசேகரம் ஆகிய எனது அடையாள அட்டை [622831724 V] 16-7-91 இல் கேரதீவிற்கும் கொடிகாமத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
[17593]

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 24
மயிலணி சைவ மகாவித்தியாலய அதிபர் திரு. சு. துரைசிங்கம் [துரையர்] எழுதிய '50 நாடுகளை அறியுங்கள்' நூல் வெளியீட்டு விழா சமீபததில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் இடம் பெற்றது. [இ-89]

## மாணவர் ஒன்றியம் நடத்தும் வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூலை 24
வடமராட்சி கிழக்கு மாணவர்களின் நன்மை கருதி கணித, விஞ்ஞான வகுபபுகளை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியமே நடத்தி வருகிறது.

இம்மாதம் 9 ஆம் திகதி உதயன் நாளிதழில் வெளிவந்த ஒரு செய்திக்கு மேற் கண்டவாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. [இ]

## மிஷனுக்கு புதிய தலைவர்

யாழ்ப்பாணம், ஜூலை 24
ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் இலங்கைக் கிளை உப தலைவராகவும், கொழும்பு மடத்தின் தலைவராகவும் தவத்திரு ஆத்மகனானந்த மகராஜ் பதவியேற்றுள்ளார்.

இவர் கடந்த எட்டு வருடங்களாகக் கோயம்புத்தூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் பல முக்கிய பதவிகளை வகித்தவர். [அ]

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னையின் மடியில்: | அரக்கர் அழிப்பில்: |
|---|---|
| 1943 | 1983 |
| — | — |
| 02 | 07 |
| — | — |
| 13 | 24 |

### சின்னையா சிவானந்தன்

(ரதிவார்ச் வேக்ஸ் முகாமையாளர்)

உங்கள் ஆத்மா சாந்தி அடைய கடவுளை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்-
நிஷாந்தி, பிரசன்னா, சிந்துஜா.

''நிஷாந்தி வாசா''
315/5, பலாலி வீதி,
திருநெல்வேலி. (17594)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| ஆண்டவன் படைப்பு: | ஆள்பவன் அழிப்பு: |
|---|---|
| 20 | 24 |
| — | — |
| 04 | 07 |
| — | — |
| 1966 | 1983 |

செல்வன்

### செந்திநாதன் ஜயேந்திரன்

திதி: 26 - 07 - 1991

ஆடிப் பூரணை தினத்தில்
அரச பேருந்தில் சென்ற - உன்னை
அரச படைகள் வழிமறித்து
பிஞ்சென்றும் பாராது
நெஞ்சில் இரக்கமின்றி
வஞ்சகமாய்க் கொன்று
ஆண்டுகள் எட்டு ஆனாலும்
ஆறாது ஆறாது எங்கள் கண்ணீர்.

உமது பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, அண்ணாமார், அக்கா,
தம்பி, மைத்துனர் மைத்துனி,
மருமக்கள், பெறாமகள்.

'திருவேரகம்'
கணேஸ் வீதி, சங்கானை. (17544)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



இறைவன் படைத்த நாள்
3 - 1 - 1933

இறைவன் அணைத்த நாள்
24 - 6 - 1991

### அமரர் சீ. சர்வானந்தன்

[வட இலங்கை சங்கீத சபை (N. C. O. M. S.) நிர்வாகப் பொறுப்பாளர்]

அப்பா!
மெழுகு விளக்காய் உருகினீர்களே!
எம்மை மின் விளக்காய் ஏற்றிவைக்கவா?!

இன்று 24-7-1991 எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக் கிருத்தியத்தில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்படி பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

89, வைமன் வீதி
நல்லூர். [17596]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஒத்துழைப்பு கோரி காவல் துறை அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 24
தமிழீழப் போராட்டத்தில் முக்கிய கட்டமான, ஆனையிறவு மீட்புப் போர் சம்பந்தமாக தற்போது நடைமுறைப் படுத்தப்படும் வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளை சரியான முறையில் கடைப் பிடிப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

தமிழீழ காவல்துறையினர் விடுத்த அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் இந்த உக்கிர போரில் எமது போராளிகளின் தேவைகளை மனதில் கொண்டு தமிழீழ காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவினர் பிரதான வீதிகள் பலவற்றில் வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புக்களைப் பலப்படுத்தியுள்ளனர்.


இவர்களுக்கு உதவியாக சாரணப் பிரிவு, சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவு ஆகியவையும் இணைந்து செயற்படுகின்றன. வீதியில் எமது போராளிகளின் வாகனங்கள் வரும் பொழுது இவர்கள் தமது சைகைகளை ஊதுகுழல் மூலமோ அல்லது கைகளினாலோ வெளிப்படுத்தினால், பொதுமக்கள் அனைவரும் வீதியின் ஓரமாக ஒதுங்கி நிற்க வேண்டும். வரும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாது விட்டுக் கொடுத்து பின் பயணத்தைத் தொடர வேண்டும்.

இன்று குடா நாட்டின் சகல பாடசாலைகளும் திறக்கப் பட்டுள்ளன. வீதிப் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ள பாதையில் கூட மாணவர்கள் செல்ல வேண்டியுள்ளனர்.

அதே சமயம் இயக்க உறுப்பினர்கள் செல்லும் வாகனங்களும் தங்குதடையின்றி இலகுவாக செல்ல வேண்டியுள்ளது. எனவே எல்லோரினதும் நன்மைகளை மனதில் கொண்டு பாடசாலை செல்லும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும்போது மிக ஓரமாகச் செல்ல வேண்டும். கூட்டமாகச் சென்று வாகனங்களுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது. இயலுமானவரை பிரதான வீதிகளைத் தவிர்த்து உள் பாதை ஊடாகச் செல்ல முயற்சிக்க வேண்டும்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அந்திரேஸ்பிள்ளை விமலதாசன்

அளிப்பு : 1954 – 01 – 17
அழிப்பு : 1983 – 07 – 24

''ஈழத் தமிழ் மக்களது போராட்டமானது உலகளாவிய ரீதியில் மனிதன் மனிதனாக வாழ்வதற்கு நடாத்தும் போராட்டத்தின் ஓர் அம்சமே''
— விமலதாசன்

'பற்றிமா கிரி',
பண்டத்தரிப்பு. —குடும்பத்தினர்
[17598]

## மரண அறிவித்தல்

திருமதி

### கணபதிப்பிள்ளை சொர்ணம்மா

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சொர்ணம்மா 22-07-91 ல் சங்குவேலி வடக்கில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவமணியின் அன்புத் தாயாரும், பொன்னுத்துரையின் மாமியாரும், காலஞ்சென்ற அருந்தவநாதன், சிறிகரநாதன் (நியூலங்கா ரேடர்ஸ், கொள்ளுப்பிட்டி), சிவநாதன், ஜெயநாதன் (டென்மார்க்), சதானந்தன் (சுவிஸ்), திருமதி விமலா அருந்தவநாதன், திருமதி மாலா சிறிகரநாதன் ஆகியோரின் பேர்த்தியும், ஆர்த்திகா, தர்ஷன், தர்ஷிகா ஆகியோரின் பூட்டியும், உடுகம பிரபல வர்த்தகர் முருகேசுவின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23 – 07 – 91 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கந்தரோடை மயானத்தில் தகனம் செய்யப் பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதத்தம்பி வீதி,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
நா. பொன்னுத்துரை
[மருமகன்]
[17591]

## உதயன்

### 8 ஆண்டுகளின் பின்னர்....

நேற்றுக் கடந்து போனது ஜூலை 23 ஆம் திகதி. நாளை வருவது ஜூலை 25. இந்த இரண்டு நாட்களும் ஈழத் தமிழர் வரலாற்றில், அவர் தம் போராட்ட நிகழ்வுகளில் மறக்க முடியாத நாட்கள்.

1983 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதியன்று, திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் இராணுவ வாகனத்தின் மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதல் தமிழ் இளைஞர்களின் போராட்டத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

அது போலவே, ஜூலை 25 ஆம் திகதி, தமிழ் மண்ணில் இருந்து தூரத்தே தென்னிலங்கையில் வாழ்ந்த சாதாரண தமிழர்களின் நெஞ்சங்களில் சொந்த மண் மீது நாட்டம் கொள்ள வைத்தது.

திருநெல்வேலியில் கொலையுண்ட 13 சிப்பாய்களின் சடலங்களும் கொழும்பு சென்றடைந்ததும், அங்கு பெரும் இனக்கலவரம் வெடித்தது. அகில உலகமும் கறுப்பு ஜூலை என்று வர்ணிக்கும் அளவுக்குச் சிங்களக் குண்டர்களும், சிவில் உடை தரித்த இராணுவக் குண்டர்களும் அசுரர்களாக மாறித் தமிழர்களைக் கொன்றொழித்தார்கள். தென்னிலங்கை எங்கும் தமிழர்களின் இரத்த ஆறு ஓடியது. அவர்களின் உடைமைகள் சூறையாடப்பட்டன; தீயிட்டுப் பொசுக்கப்பட்டன.

1983 ஜூலைக்கும், 1991 ஜூலைக்கும் இடைப்பட்ட எட்டு வருடங்களில் தமிழர்களின் உரிமைப்போராட்டம், பல வித இன்னல்கள், இடையூறுகள், இழப்புகளின் மத்தியிலும் வீறு நடைபோட்டு, பெரு வளர்ச்சி கண்டுள்ளது.

இலங்கை அரசும், இராணுவமும் தமிழர்களைக் கொன்றொழித்தும், கொடுமைப்படுத்தியும் அவர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்க எடுத்த சகல முயற்சிகளும் தோல்வி கண்டன. இப்போதும் தோல்வி கண்டே வருகின்றன. இந்தியப் படையை வரவழைத்து தமிழர் போராட்டத்தை நசுக்கலாம் என்றும் இலங்கை அரசு கனவு கண்டது. அதுவும் பலிக்கவில்லை.

இராணுவ மேலாதிக்க நிலையை எய்தி, அற்ப சொற்ப உரிமைகளை வழங்கி பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்று இப்போது புதிய கனவு காணத் தொடங்கி இருக்கிறது.

இந்தக் கனவும் பலிக்காது என்பதை ஆனையிறவுப்போர் அரசுக்குப் பூடகமாகவேனும் புகட்டியிருக்கும் என நம்புகிறோம்.

அரசின் படைகளோடு நேருக்கு நேர் சில யார் தொலைவில் நின்று சமரிடக் கூடிய பலம் தமிழர்களுக்கு வந்திருக்கிறது. அந்தப் பலத்துக்கு மக்களினதும் போராளிகளினதும் மனோபலம் தான் ஆதாரம்.

ஆனையிறவுக் களத்தில் சண்டையிடும் போராளிகளுக்கு மக்கள் அளிக்கும் ஆதரவு ஸ்ரீலங்கா அரசின் மீது, சிங்கள ஆளும் வர்க்கத்தினர் மீது ஏற்பட்ட வெறுப்புணர்வின் பிரதிபலிப்பே. எப்பாடுபட்டேனும் சுதந்திரம் அடைந்திட வேண்டும், பூரண உரிமைகளுடன் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் தனியரசின் கீழ் வாழ வேண்டும் என்ற உணர்வின் பிரதிபலிப்பே.

இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாமல், கண்ணை மூடிக்கொண்டிருக்க நினைக்குமானால், தனது கனவு நிலையில் தொடர்ந்து மூழ்கிப் போயிருக்க விரும்புமானால், இலங்கையில் இரண்டு நாடுகள் உருவாகுவதற்கு ஸ்ரீலங்கா அரசே உதவி செய்ததாக முடியும்!

# மார்க்ஸீயத்தைக் கைவிட்டு ஜனநாயக வழியில் சோவியத்!

## கம்யூனிஸ்ட் கட்சிக்கு கோர்பி அழைப்பு விடுப்பார்

மாஸ்கோ, ஜூலை 24

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மார்க்ஸீயத்தைக் கைவிட்டு, ஜனநாயக சோஷலிசத்தை பின்பற்ற வேண்டும் என்று ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் கோரத் தீர்மானித்திருப்பதாக சோவியத் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பான தனது யோசனையை திரு. கோர்பச்சேவ் நாளை (வியாழக்கிழமை) நடைபெறவிருக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க இருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

திரு. கோர்பச்சேவின் புதிய யோசனைப்படி—

தனிநபர் உடைமை என்ற கொள்கையை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளும்.

இது வரை காலமும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியை வழி நடத்தி வந்த லெனினிஸ — மார்க்ஸீய கொள்கைகள் கைவிடப்படும் என்றும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

(உ-எ)

## கொக்கட்டிச்சோலை கொடூரம்:

## ஜனாதிபதி ஆணைக் குழு பகிரங்க விசாரணை!

கொழும்பு, ஜூலை 24

கொக்கட்டிச்சோலை படுகொலை பற்றி விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு தனது பகிரங்க விசாரணையை இம்மாதம் 29 ஆம் திகதி மட்டக்களப்பில் ஆரம்பிக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலையில் இராணுவம் நடத்திய வெறியாட்டத்தில் நூற்றுக்கணக்கான தமிழர் படுகொலை செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே. [உ-எ]

## 'பற்றரி'களை வழங்கி உதவுக!

யாழ்ப்பாணம், ஜூலை 24

அவசர பாவனைக்கு சிறிய, பெரிய 'பற்றரி' கள் தேவைப்படுவதால், அவற்றை தந்துதவுமாறு பொதுமக்களையும், வர்த்தகர்களையும் விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

அத்துடன் மண்வெட்டி, சாக்கு, பிக்கான், உரப்பை சணல் போன்றவையும் மேலதிகமாக — மிகவும் அவசரமாகத் தேவைப்படுகின்றன. அவற்றை செயலகங்களில் விரைவாக கொடுத்துதவுமாறு புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

[ஒ]

## சமஷ்டி அரசமைப்பை ஸ்ரீலங்கா ஏற்கவேண்டும்

### சுப்பிரமணியம் சுவாமி தெரிவிப்பு

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து இந்திய அரசு தனது நிலையைத் தெளிவாக்க வேண்டும் என்று முன்னாள் பிரதமர் சந்திரசேகரின் சமாஜ்வாதி ஜனதாதள் கட்சி கோரியுள்ளது.

கட்சியின் பேச்சாளரும் முன்னாள் மத்திய அமைச்சருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க கொழும்பு அரசு சமஷ்டிஅரசமைப்புமுறையையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

சமஷ்டி அரசமைப்பு முறையை அமுல்செய்வதால், இந்தியாவின் நலன்களுடன் இலங்கைத் தமிழரின் அபிலாஷைகளும் பாதுகாக்கப்படும் என்று அவர் சொன்னார். [ஒ-எ]

## தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 24

பருத்தித்துறையில் கடந்த இரு வாரங்களாக தேங்கிக் கிடந்த 112 தபால் பொதிகள் நேற்று மாலை யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டன.

அந்தந்தப் பகுதி உபதபால் அலுவலகங்களினூடாக இன்று தபால்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-5-15]

## இதுவரை பதிவு செய்யாத ஈழத் தமிழர் விவகாரம்; மாநில அரசு முடிவு செய்யும்

சென்னை, ஜூலை 24

பொலீஸ் நிலையங்களில் தமது பெயர் மற்றும் விவரங்களைப் பதிவு செய்யாத இலங்கைத் தமிழரை நாடு கடத்துவது பற்றி தமிழ்நாடு அரசு தான் முடிவு செய்ய வேண்டும்.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விஷயம் குறித்து தாம் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுடன் விவாதிக்க இருப்பதாகவும் திரு, சவான் திருச்சியில் செய்தியாளர்களிடம் கூறினார்.

முகாம்களுக்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழரில் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே பொலீஸ் நிலையங்களில் தம்மைப் பதிவு செய்துள்ளனர் என்றும் அமைச்சர் சவான் சொன்னார். (ஒ-எ)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். பிரதேச ஆணையாளர் பிரிவுக்குட்பட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களையும், தற்போது பயிற்சி பெற்று வருபவர்களையும் நாளை (வியாழன்) மாலை 4 மணியளவில் நல்லூர்மங்கையர்க்கரசிவித்தியாலயத்தில் ஒன்று கூடுமாறு கோரப்பட்டுள்ளது. (ஒ 3)

## அதிபர் பயிற்சி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24

3 ஆம் தர அதிபர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்கு எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது இப்பயிற்சி நெறியைப் பெற விரும்புவோர் நாளை மறுதினத்துக்கு (வெள்ளி) முன்னர், யாழ். கல்வி அலுவலகத்தில் தம்மைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ)

## சண்முகம் மரணம் குறித்து நாடாளுமன்றில் அறிக்கை!

சென்னை, ஜூலை 24

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக பொலீஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த கோடிக்கரை நிலப்பிரபு சண்முகத்தின் மரணம் குறித்து அறிக்கை ஒன்றை இந்திய அரசு இன்று [புதன்] நாடாளுமன்றத்தில் வெளியிடும்.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று இத்தகவலை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

நேற்று முன்தினம் (திங்கள்) இரவு சென்னைக்கு விஜயம் செய்த அமைச்சர் சவான், கோடிக்கரை சண்முகம் மர்ம மரணம் அடைந்த வேதாரண்யம் காட்டுப் பகுதியை ஹெலிக்கொப்டரில் சென்று பார்வையிட்டார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசேட புலனாய்வுக் குழுவின் தலைவர் திரு. டி. ஆர். கார்த்திகேயனும் அமைச்சருடன் சென்றிருந்தார். [ஒ-எ]

## காங்கேயம் தொகுதியில் ஆர். எம். வீரப்பன் போட்டி

சென்னை, ஜூலை 24

காங்கேயம் சட்டசபைத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் அ. தி. மு. க. வேட்பாளராக கல்வி அமைச்சர் ஆர். எம். வீரப்பன் போட்டியிட இருக்கிறார்.

இத்தகவலை அ. தி. மு. க. பொதுச் செயலாளரும் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா நேற்று வெளியிட்டார்.

கடந்த சட்டசபைத் தேர்தலில் செல்வி ஜெயலலிதா தாம் போட்டியிட்ட காங்கேயம், பர்கூர் ஆகிய இரு தொகுதிகளிலும் வெற்றியீட்டினார் என்பதும், பின்னர் அவர் காங்கேயம் தொகுதியை ராஜினாமா செய்தார் என்பதும் தெரிந்ததே.

(உ-எ)

## படையினரின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சிப்பாய்களின் சடலங்கள் மூன்று லொறிகளில் கோண்டாவிலுக்கு எடுத்துவரப்பட்டிருந்தன.

சடலங்கள் கோண்டாவிலுக்கு எடுத்துவரப்படுவதற்கு முன்னர் யாழ். முத்திரைச் சந்தையில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

கையளிக்கப்பட்ட 29 சடலங்களில் மூன்று சடலங்கள் மிகவும் மோசமாகப் பழுதடைந்திருந்ததால் முத்திரைச் சந்தையில் அந்த மூன்று சடலங்களும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(இ)

## இந்தியாவுக்கு 22 கோடி டொலர் உதவி

புதுடில்லி, ஜூலை 24

இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க சர்வதேச நாணயச் சபை 22 கோடி டொலர் அவசர கடனுதவியை வழங்கத் தீர்மானித்துள்ளது.

சபையின் அவசரக் கூட்டம் திங்கட்கிழமை வாஷிங்டனில் நடைபெற்றபோது இம்முடிவு எடுக்கப்பட்டது. (இ-எ)

## விடுதலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்றுத் தேவையை ஈடு செய்யும் முதற்கட்டமாக சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணி தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது—

1982 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் முதன் முதலாக தாக்குதல் அணி ஒன்றை உருவாக்கி இருந்தது. அந்த அணிக்கு சாள்ஸ் அன்ரனியே (லெப். சீலன்) பொறுப்பேற்றிருந்தார். அவர் தலைமை வகித்து நடத்திய பல தாக்குதல்கள் வெற்றி அடைந்தன. அந்த மாவீரனும் முன்னோடியுமான சாள்ஸ் அன்ரனியின் பெயர் சிறப்புப் படை அணிக்கு சூட்டப்பட்டுள்ளது. —

சிறப்புப் படையணி ஒரு பிராந்தியத்துக்கு மட்டும் உரியதல்ல. தமிழீழம் முழுவதற்குமான அணியாகும். இதில் எல்லாப் பிராந்தியங்களைச் சேர்ந்தவர்களும் அங்கத்துவம் வகிக்கின்றனர். இது தமிழீழத்தின் எந்தப் பகுதிக்குச் சென்றும் போரிடும் —

சிறப்புப் படையணி உருவாக்கப்பட்டதிலிருந்து அது ஈடுபட்ட இரண்டு பெரிய நேரடிச் சண்டைகளிலும் பெரு வெற்றி ஈட்டியது —

கடந்த மே மாதம் வவுனியாப் பகுதியில் பெரும் படையெடுப்பை நடத்தி, கொந்திக்காரன் குளம், கோழியாகுளம் பகுதிகளில் நிலை கொண்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினரை விரட்டி அடித்தமை ஒன்று —

கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை மன்னார் நோக்கிய படை எடுப்பின் போது, பூவரசங்குளம், பிராமணாலங்குளம் பகுதிகளில் நேரடிப் போர் புரிந்து 100 க்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்று படை எடுப்பை முறியடித்தமை இரண்டாவது —

தற்போது நடை பெறும் ஆனையிறவுப் போரிலும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணியே முதன்மையான பங்கை வகித்து வருகிறது —

இந்தச் சிறப்புப் படையின் தளபதியாக திரு. பால்ராஜ் பணிபுரிந்து வருகிறார் — என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருககிறது.

(அ)

## ஆனையிறவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றின் முன்னேற்றம் தடைப்பட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன.

ஆனையிறவு முகாமைச் சுற்றியுள்ள பரந்த நிலப்பரப்பு, விடுதலைப் புலிகள் அடுக்கி வைத்துள்ள மண் மூடைகள், ஆங்காங்கே நிற்கும் பனை மரங்கள் எல்லாம் கடும் தாக்குதலை நடத்த விடுதலைப் புலிகளுக்கு உதவும் சிறந்த அம்சங்களாக இருப்பதாகவும்—

விடுதலைப் புலிகள் மிக நவீனமாக பதுங்கு குழிகளை அமைத்து அவற்றில் இருந்து கொண்டு தொடர் தாக்குதலை நடத்திக்கொண்டிருப்பதாகவும்—

செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

[உ-எ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமான ரீதியிலேயே சடலங்கள் ஒப்படைப்பு!

## புலிகள் பிரமுகர் ராஜன் கூறுகிறார்

சிப்பாய்களின் சடலங்களை ஸ்ரீலங்கா அரசிடம் ஒப்படைக்க நாம் மேற்கொண்ட முடிவு மனிதாபிமான அடிப்படையிலானது.

யாழ். மாவட்ட அரசியல். நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இ. இராஜன் சடலங்களைக் கையளித்த பின்னர் செய்தியாளர்களிடம் மேற்க்ண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நடத்திவரும் அதிரடித் தாக்குதல்கள் மூலம் விடுதலைப் புலிகள் புதிய சாதனைகளைப் படைத்து வருகிறார்கள்.

கவச வாகனங்கள், பிரங்கிகள் சகிதம் முன்னேறி வரும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரை வெட்ட வெளியில் எமது போராளிகள் நேருக்கு நேர் எதிர்கொண்டு வருவது மூலம் புதிய வரலார்று ஒன்று படைக்கப் பட்டுக்கொண்டிருக்கிறது என்றும் திரு. இராஜன் கூறினார். (இ)

கண்மூடித்தனமான

# ஷெல் தாக்குதல்களை நிறுத்துமாறு உத்தரவாம்!

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களிலிருந்து குடியிருப்புகளை நோக்கி கண்மூடித்தனமான முறையில் ஷெல் தாக்குதல் நடத்துவதை நிறுத்துமர்று பாதுகாப்பு அமைச்சு இங்குள்ள முகாம் அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கியுள்ளதாம்.

இந்தத் தகவலை பாதுகாப்பு அமைச்சு, யாழ் அரச அதிபருக்கு தெரிவித்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதிக்குப் பின்னா, வடபகுதி முகாம்களில் இருந்து குடிமனைகள் மீது க்ண்மூடித்தனமர்க ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டதால் பொதுமக்கள் பலர் பலியானதாகவும், சொத்துக்கள் நாசமானதாகவும் யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப் படுத்தி இருந்தார். ஷெல் தாக்குதல்களை உடன் நிறுதத வேண்டும் என்றும் அவர் பாதுகர்ப்பு அமைச்சைக் கோரியிருந்தார்.

அதற்குப் பதில் அளிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சு இந்தத் தகவலை அரச அதிபருக்கு நேற்று அனுப்பியுள்ளது. (அ-3)

மல்லாகத்தில் நேற்று

# வீரவேங்கைகளுக்கு மக்கள் திரண்டு வந்து அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 24

வெற்றிலைக்கேணி — கட்டைக்காடு போர்க் களத்தில் தீரமுடன் போராடி, தமிழ் மண்ணுக்காக தம்முயிரை தியாகம் செய்த எட்டு வேங்கைகளின் புகழுடல்கள் நேற்று மல்லாகம் அமெரிக்க மிஷன் பர்டசாலையில் வைக்கப்பட்டிருந்தன.

பல நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டுவந்து, வீர வேங்கைகளுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

அங்கு விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் அஞ்சலியுரை நிகழ்த்தினர் இறுதியில் புகழுடல்கள் கோப்பாயில் மாவீரர்கள் துயில் கொள்ளும் புனித பூமியில் தீயுடன் சங்கமமாகின.

தாயக மண்ணை மீட்கப் போரிட்டு, வீரமரணம் அடைந்த அந்த எட்டு வேங்கைகளினதும் பெயர், விவரம் வருமர்று:

வில்ஸன் (வேலுப்பிள்ளை சந்திரகுமார் — சங்கானை). விஜயன்(வேலுப்பிள்ளை மாரிமுத்து — கண்டி), மணிவாசகன் (கணேசநாதன் ஜனார்த்தன் — இணுவில்), பட்சன் (சீனியர் உதயராஜா — புன்னாலைக்கட்டுவன்). சிவானி (சண்முகநாதன் றோகினி— கொக்குவில்),

கைலன் (அரியரட்ணம் குசந்தன் — வட்டுக்கோட்டை). பாண்டியன் (துரைசிங்கம் கிருஷ்ணகுமார் — பண்டத்தரிப்பு), அறிவொளி (சிறி பத்மநாதன் சத்தியசீலன்— சுண்டுக்குளி), [ஒ]

# ஜே. ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் இந்தியா இன்னும் ஆதரவு

## வெளியுறவு அதிகாரி கூறுகிறார்

புதுடில்லி. ஜூலை 24

1987 இல் ராஜீவ் - ஜெயவர்த்தனா செய்து கொண்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையை இந்தியா இன்னும் ஆதரித்து வருகிறது.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் கடந்த திங்கள் மாலை செய்தியாளர்களிடம் இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண 1987 ஒப்பந்தமே தகுந்த அடிப்படையாகும் என்றும் அந்த அதிகர்ரி சொன்னார்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கொழும்பில் யு. என். ஐ. செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் 1987 ஒப்பந்தத்தை ஆதரித்து கருத்து வெளியிட்டிருந்தார்.

அது பற்றி கருத்து வெளியிடுகையிலேயே புதுடில்லி அரசு அதிகாரி முன்கண்ட கருத்தை வெளியிட்டார். (இ-எ)

## கப்பல்கள் இரண்டும் திருமலையில்

யர்ழ்ப்பாணம், ஜூலை 22

கடந்த 10 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்த 'குமாரி' கப்பலும், அங்கு பொருள்களை இறக்கிக் கொண்டு நின்ற 'லில்லி' கப்பலும் தற்சமயம் திருகோணமலையில் தரித்து நிற்கின்றன.

இந்தக் கப்பல்களை மீண்டும் இங்கு கொண்டுவர யாழ். அரச அதிபர் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார். (இ-3)

அடுத்த தவணை முதல்

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர் பாடசாலை தோறும் நியமனம்

பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக் குறையை நீக்கி வைக்குமுகமாக வெளியில் இருந்து ஆங்கில ஆசிரியர்கள் பகுதி நேர அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்படுவர்.

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களுக்கு மூவாயிரம் வெற்றிடங்கள் உள்ளன.

இந்த வெற்றிடங்களுக்கு நிரந்தரமாக ஆங்கில ஆசிரியர்களை நியமிக்கும் வரை, ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மற்றும் சிறந்த ஆங்கில அறிவு பெற்ற அரசாங்க ஊழியர்கள் சேவைக்கு அமர்த்தப்படுவர்.

நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு அடுத்த பாடசாலைத் தவணையில் இருந்து பகுதி நேர ஆசிரியர்கள் அமர்த்தப்படுவர்.

அவர்களின் தகைமைகளுக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். பட்டதாரி ஆசிரியர் ஒருவர் ஒரு மணித்தியால போர்தனைக்கு 75 ரூபாவைப் பெறுவார்.

பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு ஐம்பது ரூபரவும் சிறந்த ஆங்கில அறிவுடைய ஊழியருக்கு மணித்தியாலத்துக்கு 40 ரூபாவும் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படும் ஆசிரியருக்கு ஒரு வாரத்திற்குப் பயிற்சியளிக்கப்படும். பயிற்றப்படாத 250 ஆசிரியர்கள் பாடசாலைகளில் நியமிக்கப் படுவதற்கு முன்பதாக பேராதனை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர்.

— இப்படி அமைச்சர் அத்துலத்முதலி செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். [ஒ-எ]

# கைதான சாந்தன் சயனைட் உட்கொள்ள முயற்சித்தாராம்

சென்னை, ஜூலை 24

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகக் கடந்த திங்கட்கிழமை சென்னையில் கைது செய்யப்பட்ட சாந்தன், கைதாவதற்கு முன்னர் தான் வைத்திருந்த சயனைட் வில்லையை அருந்தித் தற்கொலை செய்ய முயற்சித்தார் என்றும்— அந்த முயற்சியை புலனாய்வுப் பொலீஸார் முறியடித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைதான சாந்தனிடம் இருந்து. ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வரும் சிவராசனுக்குரிய உடைமைகள் மற்றும் டயறி முதலியன கைப்பற்றப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் இருந்து தமிழ் நாடு வந்த சாந்தன், கோடம்பாக்கம் பொறியியல் கல்லூரியில் தன்னை ஒரு மாணவராகப் பதிவு செய்து கொண்டார் என்றும்—

ஈ. பி. ஆர். எல். எப். பத்மநாபர் உட்பட 13 பேர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னர் சாந்தன் இலங்கை திரும்பினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் சிவராசன் மற்றும் சுபா ஆகியோருடன் தமிழகம் திரும்பிய சாந்தனை, அண்மையில் மர்ம மரணத்துக்கு ஆளான சண்முகம் வரவேற்று தனது வீட்டில் தங்க வைத்தார் என்றும் புலனாய்வுப் பகுதியினர் தெரிவித்தனர். (இ-எ)

# கல்முனை அகதி முகாமில் தீ! 5 தமிழர் கருகி மரணம்!!

மட்டக்களப்பு மாவட்டம் கல்முனை நகரில் அமைக்கப் பட்டிருந்த அகதி முகாமில் ஏற்பட்ட தீவிபத்தில் 5 தமிழ் அகதிகள் கருகி மரணமானார்கள். மற்றும் 15 பேர் மோசமான எரிகாயங்களுக்கு இலக்கானார்கள்.

பாடசாலை வளவில் ஓலையால் வேயப்பட்டிருந்த தற்காலிக அகதி முகாமில் தீப்பற்றிக் கொண்டது. அந்த சமயம் அங்கு சுமார் 3 ஆயிரம் அகதிகள் தங்கியிருந்தனர் என்றும்—

இந்தச் சம்பவத்தில் அந்த அகதிமுகாம் முற்றாக எடுத்து நாசமானது என்றும் — கொழும்பில் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் குறித்து சுயாதீன செய்தி வட்டாரங்களில் இருந்து தகவல் ஏதும் வெளியாகவில்லை. (ஓ-எ)

## காட்டு யானை தாக்கியதில் கால் முறிந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஊர் எல்லைக்குள் வந்த காட்டு யர்னையைத் துரத்திச் சென்றவர் அந்த யர்னையாலேயே மிதியுண்டு கால் முறிந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உருத்திரபுரம் சிவநகர் எல்லை குடிமனை பகுதிக்குள் நேற்றுப் பகல் 11 மணியளவில் வந்த காட்டு யானையை துரத்திச் சென்ற சமயமே அது திரும்பி வந்து தாக்கி காலால் மிதித்தது.

உருத்திரபுரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் திருநாவுக்கரசு (வயது 51) என்பரே கால் முறிந்தவர் ஆவார். (ஒ-15)

## மற்றொரு சிறுமியும் பலி

தாளையடி, ஜூலை 24

மணற்காட்டில் ஹெலிரொக்கட் தாக்குதலுக்கு இலக்காகி, மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த சிறுமி மரணமடைந்து விட்டார்.

ஞானப்பிரகாசம் அமலராஜின் [3 வயது] என்ற இந்தப் பாலகியின் சகோதரியான ஞா. அமலயோஜினி [9 வயது] என்ற சிறுமியும் கடந்த 16ஆம் திகதி — சம்பவம் நடந்த இடத்திலேயே மரணமானது தெரிந்ததே.

இவர்களது தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் ஆகிய ஐந்து பேரும் இச்சம்பவத்தில் [illegible] குறிப்பிடத்தக்கது. [ஒ-144]

# வவுனியாவில் இருந்து மடுவுக்கு உணவு லொறிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

உணவு மற்று மருந்துப் பொருள்களை ஏற்றிக் கொண்டு 18 லொறிகள் — ஐக்கிய நாடுகள் அகதிகள் தாதரகக் கண்காணிப்புடன்— நேற்று மடு அகதி முகர்மைச் சென்றடைந்தன.

தொண்டர் நிறுவனங்களின் வாகனங்கள் ஊரடங்கு வேளையிலும் செல்வதற்கு வழங்கப்பட்ட விசேட அனுமதியின் பிரகாரம், இந்த வாகன அணி வவுனியா — மன்னார் மாவட்டங்கள் ஊடாகச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பாதையூடாக வாகனங்கள் சென்ற சமயம் அப்பகுதிகளில் ஆங்காங்கே மோதல் சம்பவங்கள் நடைபெற்றதாகத் தெரியவந்தது. எனினும் வாகன அணி பயணத்தைத் தாமதியாது தொடர்ந்தது. [உ-3]

## கம்பன் விழா ஒத்திவைப்பு

இன்று 24 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை நடைபெற இருந்த கம்பன் விழா நாட்டின் இன்றைய சூழ்நிலை க்ாரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நிலைமை சீரானதும் விழாவுக்கான புதிய திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]

# ஜனதா தள் கட்சிக்குள் உட்பூசல் தீவிரமடைகிறது

ஜனதா தள் கட்சியில் ஏற்பட்டுள்ள உட்பூசல் மேலும் தீவிரமடைந்து வருகிறதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனதா தள்கட்சியின் தலைமைப் பீடம் தற்போதைய செயற்பாட்டு முறையை மாற்றி அமைக்கத் தவறுமேயானால் லோக் தள் கட்சியைத் தாம் மீண்டும் புனரமைத்துச் செயற்படப் போவதாக முன்னாள் மத்திய அமைச்சர் அஜித்சிங் அறிவித்திருக்கிறார்.

மறைந்த முன்னாள் பிரதமர் சரண்சிங் லோக் தள் கட்சியை ஆரம்பித்து நடத்தி வந்தார். அவரின் மறைவின் பின்னர் அவரது புதல்வரான அஜித்சிங் நடத்தி வந்தர்ர்.

வி. பி. சிங் காங்கிரஸில் இருந்து வெளியேறி ஜனதா தள் கட்சியை ஆரம்பித்த போது அக்கட்சியுடன் லோக் தள் இணைந்தது.

இதே வேளை — ஜனதா தள் கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளது என்பதை முன்னாள் மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மறுத்துள்ளார். [இ-எ]

## இந்தியக் கப்பல்

கடந்த வாரம் 34 இலங்கையர் உட்பட 68 வெளிநாட்டுப் பிரஜைகளை துருக்கி நாட்டுக் கடற்கரையோரப் பகுதியில் நிர்க்கதியாக இறக்கி விட்டுச் சென்ற கப்பல் இந்தியர்வுக்குச் சொந்தமானது என இப்போது தெரியவந்துள்ளது. [த-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-07-1991 இல் அச்சிட்டு வெளிவிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org